| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **59/2009** |
| **தேதி** | **:** | **09.06.2025** |
| **பெயர்** | **:** | **சந்திரன் த/பெ. தருமன்** |

வா.த.சா.2./(PW2) திரு. சந்திரன் த/பெ. தருமன் என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. (சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டை மூலம் உறுதி செய்யப்பட்டது.)

**<u>வா.த.சா.2 (PW2) சாட்சி மீண்டும் அழைத்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>**

1) நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க சாட்சி அழைப்பாணை வரப்பெற்றதா என்றால் இல்லை. நான் சாட்சி கையொப்பம் செய்த பத்திரம் என்ன பத்திரம் என்றால் தான செட்டில்பெண்ட் பத்திரம் ஆகும். அந்த பத்திரம் எந்த எழுதப்பட்டது என்றால் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. வருடம் சரியாக ஞாபகம் இல்லை. அந்த பத்திரம் யார் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் வேலு அவருடைய மகள்களான சுகந்தி, கவிதா, சங்கீதா, மஞ்சுளா ஆகிய 4 பேருக்கு எழுதிக்கொடுத்தார்.

2) வேலுக்கு அந்த சொத்துக்கள் எவ்வாறு கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வேலு தான செட்டில்மெண்ட் எழுதுவதற்கு முன்னர் அவருக்கு அந்த சொத்து எவ்வாறு உரிமையானது என்ற விவரங்கள் அடங்கிய ஆவணங்களை என்னிடம் காட்டினாரா என்றால் காட்ட வில்லை. வேலு என்பவர் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட்டில் உள்ள சொத்திற்கு எந்த உரிமையும் வேலுவிற்கு இல்லை என்றால் சரியல்டில. அதனால் அந்த தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/.M. Kalimuthuvel,
District Munsif,
Sriperumbudur.